167

# வைரமுத்துவின் கவிதைகளில் பெண்ணியம்

முனைவர் ம. கீதா
தமிழ்த்துறைப் உதவிப்பேராசிரியர்
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 043.

இலக்கியம் என்பது சமூகத்தைப் பிரதிபலித்துக்காட்டும் கண்ணாடி என்று அறிஞர் பெருமக்கள் கூறுவர். சமுதாயத்தைப் பாடாத கவிஞர்கள் இல்லை எனலாம். சமூகம் என்பது மக்கள் கூட்டம். அதாவது பலர் கூடி வாழ்கின்ற அமைப்பு. அந்தச் சமுதாயத்தையும் சமுதாயத்து உணர்வுகளையும் சமுதாயத்தில் காணலாகும் அவலங்களையும், பிரச்சனைகளையும் எடுத்துக்காட்டுவதே கவிஞரின் பணியாகும். அந்த வகையில் மக்களிடையே அக்னிக் குரல் கொடுத்த முண்டாசுக்கவி பாரதி தொடங்கி இன்றைய கவிஞர்கள் வரை பெண்ணியம் பாடாத கவிஞர்கள் இல்லை. சமுதாயப் பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து நிறைகளை வாழ்த்தி, குறைகளைக் காட்டுபவனே சிறந்த கவிஞன் ஆவான். அந்த வகையில் குறிப்பிடத்தக்கவர் கவிப்பேரரசு வைரமுத்து ஆவார். தம் படைப்புக்களால் இன்றைய இளைய சமுதாயத்தின் நெஞ்சில் தனிஇடம் பெற்றவர். சிறந்த திரைப்படப் பாடலாசிரியர், கவிஞர், நாவலாசிரியர், கட்டுரையாளர், சொற்பொழிவாளர் எனப் பன்முகப்பார்வை பவனி வருபவர். இவர்தம் படைப்புக்களில் பெண்களின் நிலை குறித்துக் குறிப்பிடும் கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வரதட்சணை

வரதட்சணை என்ற சமூகப் பிரச்சனையால் பெண் பெரிதும் பாதிக்கப்படுகிறாள். பெண் என்பவள் பிறக்கும் போது தந்தைக்கும் திருமத்திற்குப் பிறகு கணவனுக்கும் வயது முதிர்ந்த காலத்தில் மகனுக்கும் அடிமையான இருந்து வாழும் நிலையை நாம் வாழ்கின்ற சமுதாயத்தில் காணமுடிகின்றது. சமூகத்தை வழி நடத்தும் பொறுப்பில் இருந்த பெண்கள் இன்றைக்கு அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இன்றைய உலகில் பெண்ணியம், பெண் விடுதலை, கல்வி போன்றவற்றை எங்கு பேசினாலும் மறுபுறம் வரதட்சணை என்ற பெரும் பிரச்சனையில் பெண்கள் பாதிக்கப்பட்டு முதிர்கன்னிகளாக வாழும் அவல நிலையைக் காணமுடிகின்றது. இத்தகைய நிலையை,

*'கல்யாணத்துறவு பூண்டு
பெற்றோருக்கு
முதல்தேதி அமுதசுரபிகளாய்
வாழ்ந்து கொண்டு
இன்னும் நம்மிடை
எத்தனை மணிமேகலை?'*

என்று பெண்களின் நிலையைச் சித்தரித்துக் காட்டுகிறார். இவ்வாறு பல



பெண்கள் திருமணம் ஆகாமல் காலம் கழிப்பதை வேதனையுடன் வெளியிடுகிறார். வரதட்சணைப் பிரச்சனையால் எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளும், எண்ணங்களும் சிதறுண்டு போகின்றன. பெண்களின் எதிர்காலவாழ்க்கை கேள்விக்குறியாக மாறுகிறது. இதனால் அவர்களின் நிகழ்காலப் பொழுதுகள் அனைத்தும் சோகமாகவே அமைகின்றன. இதனை,

*'வைகாசி வந்தால்
முப்பத்து மூன்று
முடிகிறது அவருக்கு
அவள் திருமணத்தை
நிச்சயிக்க நினைத்த
நாளில் மட்டும்
சொர்க்கத்திற்கு
விடுமுறை போலும்'*

என்ற வரிகளின் மூலம் குறிப்பிடுகின்றார். மேலும் அவளின் கனவு நிலையைப் பற்றி கூறும் போது,

*'தன் பெயரைக்
கல்யாணப் பத்திரிக்கையிலேனும்
அச்சில் பார்க்க
அவள்
ஆசைப்பட்டாள்
ஆனால்
அச்சு எந்திரங்களைப் போலவே
மனித எந்திரங்களுக்கும்
மனசுகள் இல்லை'*

என்று பெண்களின் மனக்குமுறல்களை வெளிப்படுத்துகிறார்.

முன்பெல்லாம் அரிப்பும், குதூகலமும், கனவு சங்குதாசங்களோடும் வலம் வந்த அவள் இன்று நடைபிணமாய் வாழ்கிறாள் என்பதை,

*'முன்பெல்லாம்
கனவுகளுக்காகவே
உறங்கினாள்
இப்போதோ
உறக்கமே
ஒரு கனவாகி விட்டது
சிரிப்பு என்பது
அவளுக்கு
இதழில் இல்லை
ஞாபகத்தில் இருக்கிறது'*

என்ற வரிகளின் மூலம் உணர்த்துகிறார்.

அவளுக்குக் காதல், காமம், அன்பு போன்றவற்றில் அதிக ஈடுபாடு இல்லை. ஏனென்றால் அவளின் வாழ்க்கை வரதட்சணையால் நிச்சயிக்கப்பட்டதால் அவளின் உணர்வுகளும் எண்ணங்களும் கூட காய்ந்து போய்விட்டன என்பதனை,

*'மன்மதன்*
*ஆவள் மீது எய்த*
*மலர்க் கணைகள்*
*இன்று*
*சுள்ளிகளாகி விட்டன'*

என்ற வரிகளின் மூலம் பெண்களின் துயரநிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

## திருமணம்

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது என்பர். ஆனால் இன்றைய சமூகத்தில் சாதி, சமயம், பெண் வீட்டார் கொடுக்கும் ரொக்கம் இவற்றை வைத்துத்தான் திருமணம் உறுதி செய்யப்படுகிறது. பெண் பார்க்கிறோம் என்ற பெயரில் திருமணச் சடங்கைக் கூட சந்தைப் பொருளாக்கிவிட்டார்கள்.

பெற்றோர்கள் வீட்டில் பெண்பிள்ளை இருந்தால் நான் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு இருக்கிறேன் என்று பேசுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். இந்தக் கருத்தைக் கூற வந்த கவிஞர் ஒருவன் ஒரு பெண்ணைப் பெற்றுத் திருமணம் செய்து கொடுப்பதற்குள் ஒவ்வொரு நிமிடமும் அவன் மரண வேதனையை அனுபவிக்கிறான் என்றும் அதனால்தான் திருமணம் என்பது என்ன என்ற வினாவை எழுப்பி அதற்கு பதிலளிக்கிறார். இதனை,

*'திருமணம் என்பது*
*இரண்டு உயிர்களின்*
*இனிப்பு ஒப்பந்தம்*
*ஆனால்*
*நடுத்தரவ ர்க்கத்துக்*
*கல்யாணம் என்பது*
*கண்ணீருக்குப்*
*புன்னகை எழுதும் முன்னுரை'*

என்ற வரிகளின் மூலம் அறியலாம்.

## குடும்பம் - இல்வாழ்க்கை

பல்வேறு இன்னல்களுக்கிடையே திருமணம் நடைபெறுகிறது. இல்வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும் பெண் பல்வேறு கனவுகளுடன் வருகிறாள். ஆனால் அவளுக்கு பொறுப்புகளும், சுமைகளும் இன்னும் அதிகமாகிறது. இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒரு கடமை உண்டு. ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே என சமூகத்தில் ஒவ்வொரு மனிதருக்கும் உள்ள கடமையைக் குறிப்பிடுகிறது புறநானூறு. ஆனால் பெண்கள் பிள்ளைபெறும் இயந்திரமாகவே கருதும் ஆணாதிக்கப் போக்கை கவிஞர் வன்மையாகக் கண்டிக்கிறார். இதனை,

*'அடி நாள் முதலாய் இந்த*
*ஆண் வர்க்கம்*
*பெண்ணைக்*



*கர்ப்பஞ் சுமக்க மட்டும்*
*கைகுலுக்கி வரவேற்கும்*
*உற்பத்தி உறவுகளின்*
*ஒதுக்குத்தான் வைத்திருக்கும்'*

என்று குறிப்பிடுகிறார். ஆண்டாண்டு காலமாய் ஆணினம் பெண்ணினத்தை குழந்தைகளைப் பெற்றுத்தரும் ஒரு கருவியாகத் தான் நினைத்து வருகிறது.

பட்டாம்பூச்சியாய் சுதந்திரமாகப் பறக்க வேண்டிய பெண்கள் தம் ஆற்றல்களைச் சுருக்கிக் கொண்டு கூட்டுப் புழுக்களாய் குறுகிப்போன நிலைகளையும், வீட்டுக் காவலாளியாய் உணவு தயாரித்துத் தரும் எந்திரமாய், இல்லறவேலைகளைப் பூர்த்தி செய்யும் ஏவலாளாய், வெளியுலகுக்குத் தன் மனைவி இவள் என்று அடையாளம் காட்டும் ஒரு நபராகத்தான் நடத்தி வருகிறது. இருப்பினும் இல்லறத்தை நல்லறமாக்க பெண்கள் படும்பாட்டை,

*'பாவம் மனைவி*
*இந்த*
*இல்லறக் கிரிக்கெட்டில்*
*கட்டிலறைக்கும்*
*சமையலறைக்கும்*
*ரன்கள் எடுத்தெடுத்தே*
*ரணமாய்ப் போனாள்'*

என்று குறிப்பிடுவதன் மூலம் சமையலறையும், கட்டிலறையும் மட்டுமே அவள் இருப்பிடம் என்பதும் சமூகத்தில் பெண்களுக்கான இடம் என்ன என்பதையும் அறியமுகிறது.

ஆண்கள் மட்டும் மகளிரை அவல நிலைக்கு இழுத்துச் செல்வதில்லை. மாமியார்களெனும் அதிகாரப் போர்வைக்குள்ளிருக்கும் மகளிர்களும் அவர்களை இன்னல்களுக்கு ஆட்படுத்துகின்றனர். இதனை,

*'அவர்களை அதட்டுவதிலேயே*
*ஆனந்தங் காணும்*
*அதிகாரிகள் என்னும்*
*ஆண் மாமியார்கள்'*

என்ற வரிகளின் மூலம் நயம்பட உரைக்கின்றார்.

அலுவலகத்தில் பணிபுரியும் பெண்கள் ஒவ்வொரு நாளும் பல்வேறு துன்பங்களைச் சந்திக்க நேர்கிறது. அலுவலகத்திற்குச் சென்று கொண்டு குடும்பச் சுமைகளை மேற்கொண்டு தம் வாழ்க்கையை நடத்துகிறாள். அலுவலகத்தில் ஏற்படும் சிக்கல்கள், இடர்பாடுகள் அவற்றிலிருந்து மீண்டு தன்னைச் சகஜமான வாழ்க்கைக்குத் திரும்ப முயற்சித்துக் கொண்டிருக்கும் அவர்களின் நிலையை நம் கண்முன் படம்பிடித்துக் காட்டுகிறார். இதனை,

*'காலையில்*
*கடிகாரத்தின் அலாரத்தையும்*
*குழந்தையின் அழுகையையும்*
நிச்சயமாய் அவளால்
நேசிக்க முடியாது.
ஆன்புக்கு நேரமில்லை

**ஆதலால்**
**காட்ட வேண்டிய பாசத்தை**
**அவள்**
**ஞாயிற்றுக் கிழமைக்குத்**
**தள்ளிப் போடுகிறாள்'**

என்ற வரிகளின் மூலம் தான் பெற்ற மகனிடம் கூட அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய அவசரத்தில் தன் பாசத்தையும், அன்பையும் தள்ளிப்போடுகின்ற கட்டாய் நிலையைக் கவிஞர் எதார்த்தத்தோடு விளக்கிக்காட்டுகிறார். இவ்வாறு அலுவலகம் சென்று அடைவதற்குள் அவள் பேருந்து நெரிசல்களிலே தன்னைச் சுருக்கிக் கொண்டு வேதனையின் விளிம்பிற்கே செல்வதாகவும் காட்சிப்படுத்துகிறார்.

அலுவலகத்திற்குள் சென்றவுடன் அவர்கள் இத்தகு இடர்பாடுகளிலிருந்து மீண்டார்களா என்றால் அதுவும் இல்லை. அங்கிருக்கும் படித்த காமுகர்களிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதனை,

**'சில ஆண்களின்**
**ஆரோக்கியமில்லாத பார்வைகள்**
**கம்பளிப்பூச்சியாய்**
**உன் முதுகில் ஊர்வலம்**
**சிலர்**
**கோப்புகளை வாங்கும் போது**
**அவர்களின்**
**விரல்களையும் விசாரிப்பார்கள்'**

என்று அந்தப் பெண்கள் படும் துன்பநிலையைக் கவிஞர் படம்பிடித்துக் காட்டுகிறார்.

## பெண் முன்னேற்றம்

ஆதிமுதல் பெண்ணை அலங்காரப் பொருளாக நினைத்து வந்த காலம் மாற வேண்டும். ஆணுக்கு நிகர் பெண்ணே என்ற நிலை வரவேண்டும். அடுப்பறைக்குள் அடிமைப்படுத்தும் எண்ணம் ஒழியவேண்டும். ஆணைப்போல் கல்வி கற்று பதவிகளில் அமர்ந்து சமுதாயத்தில் சமநிலை அடையவேண்டும். இன்றைய பெண்களுக்கு முக்கியத்துவம் சுயஉரிமை தரப்பட வேண்டும். அவர்கள் புரட்சி கொண்டு எழவேண்டும் என்ற எண்ணத்தில் கனல் பறக்கும் கவிதை வரிகளைப் படைக்கிறார். இதனை,

**'இனியேனும்**
**மாதர்களின் வரலாற்றை**
**மாறுபார்வை செய்யுங்கள்**
**கொடிகளாம் நீங்கள்**
**கொடிகள் தாம்**
**கொம்பினைத் தேடிக்**
**காற்றில் அலையும்**
**காட்டுக் கொடியல்ல**
**இந்நாட்டின் தேசியக் கொடியென்று**



**தெரியப்படுத்துங்கள்**
**அல்லிகளாம் நீங்கள்**
**அல்லிகள் தாம்**
**சந்திர வெளிச்சத்தை**
**நம்பியல்ல**
**உங்கள்**
**மகரந்தத்தின் கனத்திலேயே**
**பார்த்து விடுவீர்கள்**
**அன்னங்களாம் நீங்கள்**
**அன்னங்கள் தாம்**
**ஆனால்**
**பாலிலிருந்து தண்ணீரையல்ல**
**விஷத்தையே பிரித்தெடுக்கும்**
**வித்தியாச அன்னங்கள்'**

என்ற வரிகளின் மூலம் அறியமுடிகின்றது.

நாம் வாழும் இன்றைய சமுதாயத்தில் பெண்களுக்கு ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளையும் அவர்களின் விரக்தி, சோகம், காயம், கண்ணீர் நம்மையும் பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றது என்பதனையும் சுட்டிக்காட்டி ஆண்பெண் என்ற பேதம் நீங்கி என்றும் மனிதம் என்று பொதுமை காணுகின்ற தன்மை வரவேண்டும். இல்லறம் நல்லறமாக அமையப் பாடுபடுதல் இன்றைய ஒவ்வொரு மனிதனின் இன்றியமையாக் கடமையாகும் என்று கவிஞர் குறிப்பிடுகின்றார்.